

# துவாக்குடி  நகராட்சி மன்றம்

2022ம் ஆண்டு **மார்ச்** மாதம் **2–ம்** தேதி புதன் கிழமை  காலை 09.00 மணிக்கு நடைபெறும் உள்ளாட்சி தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற உறுப்பினர்கள் பதவியேற்பு விழா கூட்ட நடவடிக்கைகள்.

**நகராட்சி அலுவலகம்,** **தேர்தல் நடத்தும் அலுவலர் (ம) ஆணையர்,**

**துவாக்குடி.** **துவாக்குடி நகராட்சி.**

**நாள்: 02.03.2022**

---

**பொருள் எண். 1**

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய சட்ட பூர்வ ஆணை எண். 05/2022/எம்இ1 நாள்.26.01.2022ல் குறிப்பிட்டவாறு நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 1 முதல் 21 வார்டு உறுப்பினர்களுக்கு துவாக்குடி நகராட்சியின் தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் பதவி பிரமாணம் செய்து வைத்தல்.

2022–ம் ஆண்டு துவாக்குடி நகராட்சிக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 1 முதல் 21 வார்டு உறுப்பினர்களுக்கு 02.03.2022ம் தேதி காலை 9.00 மணிக்கு தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் பதவி பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.  01 முதல் 21 வார்டு உறுப்பினர்கள் பதவி பிரமாணம் உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது பதிவு செய்யப்பட்டது.

| வ. எண் | உறுப்பினர் பெயர் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | திருமதி. ரா. ஜெயந்தி | 1 |
| 2 | திரு.ஆ.ஸ்டீபன் ராஜ் | 2 |
| 3 | திரு.பெ.மோகன் பெரியகருப்பன் | 3 |
| 4 | திரு.த.ரவி | 4 |
| 5 | செல்வி. செ.சினேகா | 5 |
| 6 | திருமதி.உ.ரஹ்மத்கனி | 6 |
| 7 | திருமதி.ஜெ.உம்மல் ஹபிபா | 7 |
| 8 | திரு.செ.ராமானுஜம் | 8 |
| 9 | திருமதி. ஆ.சாருமதி | 9 |
| 10 | திரு.க.கதிரவன் | 10 |
| 11 | திருமதி.கோ.நர்மதா | 11 |
| 12 | திரு.இ.காயாம்பு | 12 |
| 13 | திரு.நீ.மனோகரன் | 13 |
| 14 | திருமதி.வீ.இந்திரா | 14 |
| 15 | திருமதி.கா.மீனா | 15 |
| 16 | திருமதி.அ.கவிதா | 16 |

| | | |
|---|---|---|
| 17 | திரு.மு.ராஜபாண்டியன் | 17 |
| 18 | திருமதி.ரா.சரஸ்வதி | 18 |
| 19 | திருமதி.பொ.சரஸ்வதி | 19 |
| 20 | திருமதி.இ.லலிதாதேவி | 20 |
| 21 | திரு.மு.ராஜா | 21 |

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1262/சி1/2021**

**தீர்மானம் : 1 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**



# துவாக்குடி நகராட்சி மன்றம்

2022ம் ஆண்டு **மார்ச் மாதம் 4–ம்** தேதி வெள்ளி கிழமை காலை 09.30 மணிக்கு நடைபெறும் நகர்மன்ற தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான கூட்ட நடவடிக்கைகள்.

**நகராட்சி அலுவலகம்,** **தேர்தல் நடத்தும் அலுவலர் (ம) ஆணையர்,**

**துவாக்குடி.** **துவாக்குடி நகராட்சி.**

**நாள்: 04.03.2022**

---

**பொருள் எண். 1** துவாக்குடி நகராட்சிக்கு நகர்மன்ற தலைவர் தேர்ந்தெடுத்தல்

துவாக்குடி நகராட்சியில் நகர்மன்ற தலைவருக்கான கூட்டத்தில் மொத்தம் உள்ள 21 வார்டு உறுப்பினர்களில் 20 வார்டு உறுப்பினர்கள் மட்டும் வருகை புரிந்தனர். திரு. ஆ.சாருமதி 9வது வார்டு உறுப்பினர் வருகை புரியவில்லை. நகர்மன்ற தலைவர் பதவிக்கு 12வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.இ.காயாம்பு மட்டும் வேட்பு மனு தாக்கல் செய்தார். மேற்கண்ட நகர்மன்ற தலைவர் வேட்பாளருக்கு திருமதி. கா.மீனா 15 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் முன்மொழிந்தார். 14வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. வீ.இந்திரா அவர்கள் வழிமொழிந்தார்கள். நகர்மன்ற தலைவர் தேர்தலுக்கு வேறு எவரும் வேட்புமனு தாக்கல் செய்யாததால் திரு. இ.காயாம்பு 12 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் துவாக்குடி நகராட்சியில் நகர்மன்ற தலைவராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கிறேன்.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1262/சி1/2021**

**தீர்மானம் : 2 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**



# துவாக்குடி நகராட்சி மன்றம்

2022ம் ஆண்டு **மார்ச் மாதம் 4–ம்** தேதி வெள்ளி கிழமை பிற்பகல் 02.30 மணிக்கு நடைபெறும் நகர்மன்ற துணைத்தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான கூட்ட நடவடிக்கைகள்

**நகராட்சி அலுவலகம்,** **தேர்தல் நடத்தும் அலுவலர் (ம) ஆணையர்,**

**துவாக்குடி.** **துவாக்குடி நகராட்சி.**

**நாள்: 04.03.2022**

---

**பொருள் எண். 1** துவாக்குடி நகராட்சிக்கு நகர்மன்ற துணைத்தலைவர் தேர்ந்தெடுத்தல்

துவாக்குடி நகராட்சியில் நகர்மன்ற துணைத்தலைவருக்கான கூட்டத்தில் மொத்தம் உள்ள 21 வார்டு உறுப்பினர்களில் 20 வது வார்டு உறுப்பினர் திருமதி.இ.லலிதாதேதி வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார். இவரது வேட்பு மனுவினை 3வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.பி. மோகன் பெரியகருப்பன் என்பவர் முன்மொழிந்துள்ளார். 17வது வார்டு உறுப்பினர் திரு.மு.ராஜபாண்டியன் என்பவர் அதனை வழிமொழிந்துள்ளார். திரு.மு.ராஜா 21வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்பு மனு பெற்று தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், வேறு எவரும் வேட்புமனு தாக்கல் செய்யப்படாததால் திருமதி. இ.லலிதா தேதி 20வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் இந்நகராட்சியின் நகர்மன்ற துணைத்தலைவராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கின்றேன்.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1262/சி1/2021**

**தீர்மானம் : 3 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

# துவாக்குடி நகராட்சி

| மன்ற கூட்ட நாள் | தீர்மான எண் | பொருள் | அலுவலகக் குறிப்பு |
|---|---|---|---|
| ***2022ம்*** *ஆண்டு* ***மார்ச்*** *மாதம்* ***30–ம் தேதி புதன் கிழமை*** *காலை 10.15 மணிக்கு துவாக்குடி நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக்கூட்டம் நடைபெறும்.* | | | |
| 30.03.2022 | 4 | **<u>பொருள் எண். 1</u>**<br>துவாக்குடி நகராட்சி ராவுத்தான் மேடு பகுதியில் உள்ள அரசு ஆரம்பப்பள்ளி, அரசு மேல்நிலைப்பள்ளி, பாரதிதாசன் தெருவில் உள்ள அரசு நடுநிலைப்பள்ளி முத்துராமலிங்கத் தேவர் சாலை பகுதியில் உள்ள அரசு ஆரம்பப்பள்ளிகளின் கட்டிடங்கள் திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றிய ஆணையரின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகிறது. பள்ளிக்கட்டிடங்கள் பழுதடைந்து தற்போது இடிக்கப்பட்டு உள்ளது. பள்ளிக்கட்டிடங்களை புதியதாக கட்டவும், பள்ளிக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் பள்ளிக் கட்டிடங்களை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய நடவடிக்கை வேண்டி பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் **மாண்புமிகு அன்பில் மகேஸ் பொய்யாமொழி** அவர்களிடம் கோரிக்கை வைக்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 822/இ1/2022** | அனுமதிக்கப் பட்டது. |
| | 5 | **<u>பொருள் எண். 2</u>**<br>5–வது வார்டில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி வளாகத்தில் உள்ள அங்கன் வாடி மையம் மிகவும் பழுது அடைந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதால், அதேபகுதியில் அம்பேத்கார் தெருவில் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தை மராமத்து பணிகள் செய்து அங்கன்வாடி மையமாக மாற்றி அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**6.00** இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>**1.** மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.<br>2. மதிப்பீடு ரூ.**6.00** இலட்சத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 823/இ1/2022** | அனுமதிக்கப் பட்டது |
| | 6 | **<u>பொருள் எண். 3</u>**<br>நகராட்சி பகுதியில் உள்ள வார்டு எண். **11**–ல் பாரதிதாசன் தெரு, திருவள்ளுவர் தெரு, வ.உ.சி தெரு, காமராஜ் தெருவில் உள்ள பழுதடைந்த வடிகால் மற்றும் சிறுபாலம் புதியதாக கட்டுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**5.00** இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலகக்குறிப்பு:**<br>**1.** மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.<br>2. மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| | 7 | **ந.க.எண். 824/இ1/2022**<br>**<u>பொருள் எண். 4</u>**<br>வார்டு எண். 21–ல் நகராட்சிக்கு சொந்தமான ஈமசடங்கு கட்டிடத்தில் உள்ள சுற்று சுவரை உயர்த்தி அமைக்கவும் மற்றும் முள்வேலி அமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>**1.** மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.<br>2. மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| | 8 | **ந.க.எண். 825/இ1/2022**<br>**<u>பொருள் எண். 5</u>**<br>வார்டு எண்.13 ராஜீவ் காந்தி நகர் குறுக்கு தெருக்களில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 9.75 இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>**1.** மதிப்பீடு ரூ.9.75 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.<br>2. மதிப்பீடு ரூ.9.75 இலட்சத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| | 9 | **ந.க.எண். 826/இ1/2022**<br>**<u>பொருள் எண். 6</u>**<br>துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசின் தொழிற்பேட்டை சிட்கோ வளாகம், நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் LPI(TP)NO.27/82 என எண்ணிடப்பட்டு 478.38 ஏக்கர் நிலம் தொழிற்பேட்டை மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்டு தற்போது சிட்கோ பராமரிப்பில் உள்ளது.<br>மனைப்பிரிவு வரைபடத்தில் பூங்கா, பொது உபயோக திறவிடங்கள் 19 Nos அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் பொது உபயோக ஒதுக்கீட்டில் 16.831 கி.மீ சாலைகள் மட்டும் 2008ம் ஆண்டு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், பொது ஒதுக்கீடு திறவிட இடங்கள் நகர் ஊரமைப்பு துறை மற்றும் நகராட்சி அனுமதி பெறாமல் சிட்கோ நிறுவனம் 5 நிறுவனங்களுக்கு (10.83 ஏக்கர்) ஒதுக்கீடு செய்து விற்பனை செய்துள்ளது.<br>பேரூராட்சியிலிருந்து நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டபோது போதுமான இடங்கள் இல்லாத காரணத்தால் அரசு | அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 10 | புறம்போக்கு என வருவாய் கணக்குகளில் இருந்த சிட்கோ வளாகம் தரிசாக இருந்ததில் அரசின் பல நலத்திட்டங்கள் மூலம் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பொது மக்களுக்கு தேவையான மேல்நிலை நீர்தேக்க தொட்டி, அரசு நடுநிலைப்பள்ளி, பொது விநியோக கடை, மகளிர் பொது சுகாதார வளாகம், அங்கன்வாடி மையம் மற்றும் சமுதாய கூடம், மழைநீர் வடிகால் போன்ற பொது மக்களின் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதனை நகராட்சி பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது.<br>அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்தில் கண்டுள்ள பொது ஒதுக்கீடுகளை நகராட்சி வசம் ஒப்படைக்க கோரி தொடர்ந்து கடிதங்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டது. நகராட்சி பராமரிப்பில் உள்ள அடிப்படை வசதி செய்யப்பட்டுள்ள இடத்திற்கான கிரையத் தொகை ரூ. 27,35,400/—மற்றும் அதற்குண்டான வட்டித் தொகையினையும் செலுத்தக் கோரி சிட்கோ நிறுவனம் மூலம் தொடர்ந்து கடிதம் வழங்கப்பட்டு வருகிறது. சிட்கோ மனைப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சி வசம் ஒப்படைக்க தெளிவாக சென்னை உயர்நீதிமன்றத்தின் வழக்கு எண். WA156/2000&45/2003 தீர்ப்புரையில் பொது ஒதுக்கீடுகள், மனைப்பிரிவு வரைபடத்தின் படியும் நிபந்தனைகளின் படியும் வேறு உபயோகத்திற்கு மாற்ற கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>சிட்கோ நிறுவனம் அரசாணை எண்.155 நாள்.13.11.2009ல் பொது ஒதுக்கீடுகள் ஒப்படைப்பு செய்ய வேண்டியதில்லை என குறிப்பிடப்பட்டுள்ளதால் பொது ஒதுக்கீடுகளை ஒப்படைப்பு செய்ய மறுத்து வருகிறது.<br>மாவட்ட ஆட்சியர் அவர்கள் 22.01.2020 அன்று நகராட்சி ஆணையர் மற்றும் சிட்கோ மேலாளரை அழைத்து கோப்புகளை பார்வையிட்டதன் அடிப்படையில் 1977ல் அனுமதிக்கப்பட்ட மனைப்பிரிவு நிபந்தனைகளின் படி பொது ஒதுக்கீடுகளை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய சிட்கோ மேலாளரிடம் கேட்டுகொண்டதற்கு சிட்கோ தரப்பில் கிரையத் தொகை செலுத்த தெரிவிக்கப்பட்டது. நகராட்சி சார்ப்பில் கிரையத் தொகை செலுத்த வழிவகை இல்லை என தெரிவித்ததுடன் ஒப்படைப்பு செய்ய வேண்டிய பொது ஒதுக்கீடு 47.84 ஏக்கர் இடத்தை ஒப்படைக்க நகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அவர்களால் உத்தரவு ஏதும் வழங்கப்படவில்லை மேற்படி பயன்பாட்டு இடத்தை ஒப்படைக்க உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 827/எப்1/2022**<br>**<u>பொருள் எண்.7</u>**<br>துவாக்குடி நகராட்சியில் புதிய கால்நடை கிளை நிலையம் தோற்றுவிக்க டாக்டர்.அ. மருதைராஜீ, உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, திருச்சிராப்பள்ளி அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க துவாக்குடி நகராட்சியில் வார்டு எண்.21 தேர்முட்டிக்கு அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் புதியதாக கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 828/இ1/2022** | அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 11 | <u>**பொருள் எண்.8**</u><br>துவாக்குடி நகராட்சி அய்யம்பட்டி சாலையில் உள்ள ஆழ்துளை கிணற்றில் இருந்து சிவன் கோவிலுக்கு தண்ணீர் வசதி ஏற்படுத்தி கொடுக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 1.00 இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>:1.** மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.<br>2. மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 829/இ1/2022** | அனுமதிக்கப் பட்டது |
| | 12 | <u>**பொருள் எண்.9**</u><br>துவாக்குடி நகராட்சி 16–வது வார்டு முன்னாள் இராணுவத்தினர் காலணி (அன்னை இந்திரா நகர்) டாக்டர். கலைஞர் நகர் பகுதியில் (சர்வே எண்.372–ல்) சுமார் 1000–க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. இந்த பகுதியில் முன்னாள் இராணுவத்தினர், ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள், விவசாய மற்றும் கட்டிட தொழிலாளர்கள் வசித்து வருகின்றனர்.<br>ஓய்வு பெற்ற முன்னாள் இராணுத்தினர் (4 நபர்கள்) அவர்கள் உதவி இயக்குநர், முன்னாள் இராணுவத்தினர் நலத்துறை 19.03.1977 மற்றும் 30.09.1977 தேதியில் விண்ணப்பித்துள்ள கோரிக்கையின் அடிப்படையில் மேற்படி சர்வே எண்.372 வேலாகுளம் பகுதியின் மொத்த பரப்பளவு 71.15 ஏக்கரில் அதிக கனமழை காலத்தில் நீர் பிடிப்பு பகுதியின் பரப்பளவு 30.00 ஏக்கர் ஆகும். மீதமுள்ள 40.00 ஏக்கர் பரப்பளவு காலி இடங்களாகவும் எந்த வித பயனுமில்லாமலும் மழைகாலத்தில் நீர் நிரம்பும் பகுதியை விட மேடாகவும் உள்ளது எனவும் முன்னாள் இராணுவத்தினர் அவர்கள் தெரிவித்துள்ளபடி, 25 ஏக்கர் பரப்பளவு அவர்களுக்கு ஒதுக்கப்படுவதன் மூலம் நீர் பரப்பு பாசன பகுதிக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படாது எனவும் சர்வே எண்.372–ல் 25 ஏக்கர் பரப்பளவை மதிப்பிடப்பட்ட பகுதிகளாக மாற்றம் செய்ய கேட்டுக் கொள்வதாக முன்னாள் இராணுத்தினரின் கோரிக்கையின் அடிப்படையில் உதவி இயக்குநர் முன்னாள் இராணுவத்தினர் நலத்துறை அவர்கள், செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, திருச்சி அவர்களிடம் தெரிவித்துள்ளனர். மேற்படி பொதுப்பணித்துறை தெரிவித்ததன் அடிப்படையில் நாள் 14.03.79–ல் கண்காணிப்பு பொறியாளர், தஞ்சாவூர் அவர்கள் தலைமைப்பொறியாளர் பாசனத்துறை, சேப்பாக்கம் அவர்களுக்கு பரிந்துரை செய்ததின் அடிப்படையில் மேற்படி சர்வே எண். 372–ல் வேலாகுளம் நீர்பரப்பு பாசனத்தை தாண்டி குளம் உள்ள புறம்போக்கு (25 ஏக்கர்) நிலத்தை வருவாய் நத்தம் புறம்போக்காக மாற்றி அமைத்து வருவாய் துறை மூலம் பெற உத்திரவிடப்பட்டுள்ளது.<br>இதே பகுதியில் சர்வே எண். 372–ல் முன்னாள் இராணுவத்தினர் குடும்பத்திற்கு **தலைவர் டாக்டர். கலைஞர்** அவர்கள் முதல்வராக இருந்தபோது 5.50 ஏக்கர் நிலம் பட்டா வழங்கப்பட்டுள்ளது.<br>மேற்படி, முன்னாள் இராணுவத்தினர் காலணி (அன்னை இந்திரா நகர்) டாக்டர். கலைஞர் நகர் பகுதியில் சர்வே எண். 372–ல் உள்ள கடந்த 45 வருடங்களாக வசித்து வரும் பொதுமக்களுக்கு நத்தம் வீட்டுமனைகளாக மாற்றம் செய்து பட்டா வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் பரிந்துரை செய்ய நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 830/எப்1/2022** | அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 13 | **<u>பொருள் எண்.10</u>**<br>துவாக்குடி நகராட்சியில் சரம் என்விரோ (பி) லிமிடெட் நிறுவனம் மூலம் பொது சுகாதார பிரிவில் 54 நபர்கள் தூய்மை பணியாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி தூய்மை பணியாளர்கள் தொடர்பாக (Safai Karamcharis) தேசிய தூய்மை பணியாளர்கள் ஆணையத்தின் தலைவர் அவர்களின் தலைமையில் திருச்சி மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற ஆய்வுகூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரையின்படி, 01.04.2022 முதல் துவாக்குடி நகராட்சியில் சரம் என்விரோ (பி) லிமிடெட் நிறுவனம் மூலம் தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியரகம் திருச்சி அவர்களின் செயல்முறை கடித எண்.8629/2021/த5 நாள்.20.07.2021–ல் அனுமதிக்கப்பட்டுள்ள தினக்கூலி ரூ.470/– (நாள் ஒன்றுக்கு) வழங்கிட நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 832/எச்1/2022** | அனுமதிக்கப் பட்டது |
| | 14 | **<u>பொருள் எண்.11</u>**<br>நகராட்சி பகுதியில் உள்ள வ.உ.சி நகர், இந்திரா தெரு, குட்டிமணி தெரு, அம்பேத்கார் தெரு பகுதி மக்களின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு வ.உ.சி நகரில் 3.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து ஒரு கோடியே எட்டு இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து தர பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் **மாண்புமிகு அன்பில் மகேஸ் பொய்யாமொழி** அவர்களை கேட்டுக்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 833/இ1/2022** | அனுமதிக்கப் பட்டது |
| | 15 | **<u>பொருள் எண்.12</u>**<br>துவாக்குடி நகராட்சி பகுதியில் தமிழக அரசு பாசன நீர் மேலாண்மை பயிற்சி நிலையம், தமிழகஅரசு உணவு மேலாண்மைக் கல்லூாி, தேசிய தொழில் நுட்ப கழகம் (National Institute of Technology) முன்னாள் மண்டல பொறியியல் கல்லூாி (Regional Engineering College) சிட்கோ தொழிற்பேட்டை, அரசு பாலிடெக்னிக் கல்லூாி, அரசு கலைக்கல்லூாி, பாரத மிகுமின் நிறுவனம் (Bharat Heavy Electricals Limited) ஆகியவை இயங்கி வருகின்றன. இவற்றிற்கு பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br>துவாக்குடி நகராட்சி வளர்ந்து வரும் நகராட்சி என்பதால் மக்களுக்கு தேவையான அடிப்படை வளர்ச்சி பணிகள் செய்வதற்கு நகராட்சி பகுதியில் போதுமான இடம் இல்லாததால், அரசு பாலிடெக்னிக் கல்லூாி பின்புறம் உள்ள காலியான இடத்தில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம், கலைஞர் உணவகம், வார சந்தை, திறந்த வெளி உடற்பயிற்சி கருவிகளுடன் கூடிய பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் அமைக்கவும், மேற்கண்ட பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய பணிகளை மேற்கொள்வதற்கு உரிய இடத்தை ஒதுக்கீடு செய்து தரவும் மேலும், அரசினர் பாலிடெக்னிக் கல்லூாி வளாகத்தின் முன்புறம் திருச்சி To தஞ்சை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள அண்ணாவளைவு பேருந்து நிறுத்தத்தை வளாகத்தின் உள்புறம் உள்ள | அனுமதிக்கப் பட்டது. |

காலியான இடத்தில் பேருந்து நிலையம் அமைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரவும் **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களிடம் கோரிக்கை வைக்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 821/எப்1/2022**

16

**<u>பொருள் எண்.13</u>**

அரசாணை எண். 277 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள். 02.07.2004ன் படி துவாக்குடி தேர்வுநிலை பேரூராட்சியிலிருந்து தரம் உயர்த்தப்பட்டு 05.07.2004–ம் தேதியிலிருந்து 3–ம் நிலை நகராட்சியாகவும் அரசாணை எண். 154 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 09.08.2010–ன் படி 09.08.2010 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும் செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 14.37 ச.கி.மீ ஆகும். 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 38875 மக்கள் வகித்து வருகிறார்கள். இந்நகராட்சியில் 8602 குடியிருப்புகள் உள்ளது.

இந்நகராட்சியை இரண்டாம்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதும் நகராட்சிக்கு ஏற்ப பணியாளர்கள் அனுமதிக்கப்படாததால் அலுவலக நடைமுறை, பொதுசுகாதாரம் போன்றவற்றில் முழுமையான செயல்பாடுகள் எட்ட முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. எனவே, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடிதம் 43141/2007/OP1 நாள். 07.10.2008ல் தெரிவிக்கப்பட்டவாறு அட்டவணையில் கண்டுள்ள பணியிடங்களை புதிதாக தோற்றுவிக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணியிடம் | இரண்டாம்நிலை நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | தற்போது உள்ள பணியிடங்கள் | புதிதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | இளநிலை உதவியாளர் | 6 | 3 | 3 |
| 2 | காசாளர் (இளநிலை உதவியாளர்) | 1 | 0 | 1 |
| 3 | தட்டச்சர் | 2 | 0 | 2 |
| 4 | உதவி திட்ட அமைப்பாளர் | 1 | 0 | 1 |
| 5 | அலுவலக இரவு காவலர் | 1 | 0 | 1 |
| 6 | ஓட்டுநர் | 7 | 1 | 6 |
| 7 | சுகாதார மேற்பார்வையாளர் | 1 | 0 | 1 |
| 8 | களப்பணி உதவியாளர் | 1 | 0 | 1 |
| 9 | பொதுசுகாதார அலுவலக உதவியாளர் (Peon) | 1 | 0 | 1 |

**அலுவலகக்குறிப்பு:** இந்நகராட்சியின் பணியாளர் செலவினம் நகராட்சியின் சொந்த வருவாயில் 49% –க்கு குறைவாக உள்ளதால் புதிதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்களை அனுமதிக்க அரசுக்கு பரிந்துரை செய்யலாம்.

**ந.க.எண். 831/சி1/2022**

அனுமதிக்கப் பட்டது

**<u>பொருள் எண்.14</u>**

17 துவாக்குடி நகராட்சி திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் **மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்** அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி 2021–22 ஆண்டு என்.ஜி.ஓ காலணி அங்கன்வாடி மையம் கட்டுவதற்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர்/தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை கடித செ.மு.ஆ.எண். 5793/2021/அ3 நாள்.27.01.2022 மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் பதிவிற்கும்.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப் பட்டது

**ந.க.எண். 1750/ இ1/2021**

**<u>பொருள் எண்.15</u>**

18 துவாக்குடி நகராட்சி 16வது வார்டு முன்னாள் இராணுவத்தினர் காலணி (அன்னை இந்திரா நகர்) சர்வே எண். 365/1A ல் உள்ள சுமார் 2.99 ஏக்கர் நிலத்தை கடந்த 18.04.1983ஆம் ஆண்டு துவாக்குடி பேரூராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, திருச்சி வட்டாட்சியரிடம் சமர்பிக்கப்பட்டு அதன் அடிப்படையில் புஞ்சை தரிசாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை இந்த பகுதியில் வசிக்கும் முன்னாள் இராணுவத்தினர் ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் விவசாய, கட்டிட தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் இதுவரை பட்டா வழங்கப்படவில்லை. எனவே, இந்த பகுதியில் பட்டா வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் பரிந்துரை செய்ய நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப் பட்டது

**ந.க.எண். 847/எப்1/2022**

**<u>பொருள் எண்.16</u>**

19 **தலைவர் டாக்டர். கலைஞர் அவர்கள்** முதல்வராக இருந்த போது துவாக்குடி நகராட்சியில் கீழ்க்கண்ட பகுதிகள் வருவாய்த் துறையினரால் அளவீடு செய்யப்பட்டு “நத்தம்” வீட்டு மனைகளாக மாற்றம் செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டது. ஆனால் முழுமையாக அனைவருக்கும் பட்டா வழங்கப்படவில்லை. எனவே, “நத்தமாக” மாற்றம் செய்யப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் அனைவருக்கும் பட்டா வழங்க மாவட்ட ஆட்சித்தலைவரை கேட்டுக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு

அனுமதிக்கப் பட்டது

| t.v© | r®nt v© | bga® | bA¡nI® | Ïl« |
|---|---|---|---|---|
| 1 | 386/2 | e¤j« | 6.970 | uhÎ¤jh‹ nkL |
| 2 | 428/2 | e¤j« | 0.340 | gŠrha¤J bkæ‹ nuhL |
| 3 | 428/3 | e¤j« | 0.300 | |
| 4 | 699/2 | e¤j« | 0.270 | KUf‹ nfhéš bjU, t‹åa® ef®, K¤Juhkè§f njt® rhiy |
| 5 | 699/3 | e¤j« | 0.620 | |
| 6 | 699/4 | e¤j« | 0.040 | |
| 7 | 699/5 | e¤j« | 2.240 | |

20

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | 703 | e¤j« | 4.890 | 703 Fthç Vçah |
| 9 | 705 | e¤j« | 1.890 | giHa fU¥ò nfhéš bjU |
| 10 | 604/18 | e¤j« | 0.665 | m©zhtisÎ |
| 11 | 604/28 | e¤j« | 0.730 | |
| 12 | 556 | e¤j« | 1.115 | trªj ef®, m«ng¤f® bjU |
| 13 | 593/2 | e¤j« | 0.400 | fUkhça«k‹ nfhéš bjU |
| 14 | 593/3 | e¤j« | 0.010 | |
| 15 | 593/4 | e¤j« | 0.025 | |
| 16 | 593/5 | e¤j« | 0.005 | |
| 17 | 593/6 | e¤j« | 0.026 | |
| 18 | 593/7 | e¤j« | 0.020 | |
| 19 | 593/8 | e¤j« | 0.175 | |
| 20 | 593/9 | e¤j« | 0.180 | |
| 21 | 565/2 | e¤j« | 1.320 | kâa«ik ef® |
| 22 | 554/2 | e¤j« | 0.020 | nk£L¤ bjU |
| 23 | 554/3 | e¤j« | 0.125 | m«ng¤f® bjU |

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண். 863/எப்1/2022**

**<u>பொருள் எண்.17</u>**

துவாக்குடி நகராட்சி பகுதியில் உள்ள 71 ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறுமின்விசை பம்பு மற்றும் 4 திறந்தவெளி கிணறுகள் உள்ளது. தற்போது வரும் காலம் கோடை காலம் என்பதால் மேற்படி உள்ள ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறுமின்விசை பம்பு மற்றும் திறந்தவெளி கிணறுகளை தினந்தோறும் இயக்கி பொதுமக்களுக்கு தண்ணீர் சீராக விநியோகம் செய்வதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் சம்பள விலைப்பட்டியல் தொகை அடிப்படையில் 6 நபர்கள் புதியதாக ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்த நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண். 864/இ1/2022**

அனுமதிக்கப் பட்டது

| | | | |
|---|---|---|---|
| | 21 | **<u>பொருள் எண்.18</u>**<br><br>துவாக்குடி நகராட்சி  திருச்சி மாவட்டத்தில் உள்ள இரண்டாம் நிலை நகராட்சி ஆகும். இதன் பரப்பளவு 14.371 ச.கி.மீ. சாலையின் நீளம் 62.058கி.மீ. ஆகும். இந்நகரில் அரசின் பல்வேறு திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நகராட்சி புற அலுவல்களை கவனிக்க நகர்மன்றத் தலைவர், ஆணையர் மற்றும் பொறியாளர் பயன்பாட்டிற்கு தனித்தனியே ஈப்பு வாகனம் தேவைப்படுகிறது. தற்போது ஒரு ஈப்பு வாகனம் நகராட்சி ஆணையர் பயன்பாட்டில் உள்ளது. நகராட்சி பொறியாளர் மற்றம் புதிதாக பொறுப்பேற்றுள்ள நகர்மன்றத் தலைவர் பயன்பாட்டிற்கு கூடுதலாக இரண்டு ஈப்பு வாகனங்கள் தேவைப்படுகிறது.எனவே, புதிதாக இரண்டு ஈப்பு வாகனம் நகராட்சி பொது நிதியிலிருந்து வாங்கி கொள்ள உத்தேச செலவினம் ரூ. 20.00 இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 908/இ1/2022** | அனுமதிக்கப் பட்டது |

ஆணையர்,
துவாக்குடி நகராட்சி.